[30th August 1961

SRI A. A. RASHEED: Has any action been taken against Mannar Gounder for false representation?

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I would like to have notice of a separate question.

Motor Boats for Fishermen

* 1519 *Q.*—SRI S. RAMASAMI THEVAR (on behalf of SRI V. SUBBIAH): கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மீனவர்களுக்கு குறைந்த விலையில் இயந்திரப் படகுகளை விநியோகிக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) அப்படியானால், எப்போது இத்திட்டம் அமுல் செய்யப் படும் ?

THE HON. SRIMANATHI LOURDHAMMAL SIMON: (அ) & (இ) There is already a Plan Scheme under operation in this State for supply of mechanised Fishing Boats, commonly known as Pabio boats, to fishermen at subsidized rates. The Scheme is being continued in the Third Plan.

SRIMATHI HEMALATHA DEVI: இதுவரையில் இந்தமாதிரி மீனவர்களுக்கு எத்தனை பாப்லோ போட்ஸ் கொடுத்திருக்கிறார்கள் ? அவைகளின் மதிப்பு என்ன ? மேற்கொண்டு எத்தனை மோட்டார் போட்ஸ் கொடுக்க அரசாங்கம் முன்வருவார்கள் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இதுவரையிலும் 65 போட்டுகள் கொடுத்திருக்கிறது. முப்பது அடி நீளமுள்ள போட்டின் விலை 19,000 ரூபாய். ஸப்ஸிடைஸ்ட் ரேட்டில் கொடுக்கும்போது 12,000 ரூபாயாக இருக்கிறது. 25 அடி நீளமுள்ள போட்டின் விலை 12,500 ரூபாய். ஸப்ஸிடைஸ்ட் ரேட் 7,875 ரூபாய். மூன்றாவது திட்டத்தில் 400 போட்டுகள் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. இப்போது 13 போட்டுகள் தயாராக இருக்கின்றன. இன்னும் 54 போட்டுகளுக்கு வேலை நடக்கின்றது.

Forest Areas (Usilampatti)

* 1520. *Q.*—SRI N. M. VELAPPAN (on behalf of SRI N. R. THIAGARAJAN): கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலுக்கா ஜி. உசிலம்பட்டி போயன் வகுப்பார்கள் ஜமீன் காலத்திலிருந்து பாரஸ்ட் குதுவல் நிலத்தில் பயிர் செய்து வந்ததை தொடர்ந்து பயிர் செய்ய அனுமதி கோரி 1958-ம் வருஷம் ஜூலை மாதம் 12-ம் தேதியில் ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனு என்னவாயிற்று ?

THE HON. SRI M. A. MANICKAVELU: No such petition is reported to have been received by the Collector of Madurai.